# இஸ்லாமிய வரலாறு

## அன்னை ஸவ்தா ரழியல்லாஹு அன்ஹா



அன்னை ஸவ்தா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் புனித அடக்கஸ்தலம் - ஜன்னத்துல் பகீஃ, மதீனா

ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களின் மறைவுக்கு பின் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் ஹஸ்ரத் ஸவ்தா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களை திருமணம் முடித்தார்கள். ஹஸ்ரத் ஸவ்தா (ரலியல்லாஹு அன்ஹா) ஆமிர் பின் லுவை எனும் வர்க்கத்தைச் சேர்ந்த ஜம்ஆ என்பவரின் புதல்வியாவார்கள். அவர்களின் தாயார் பெயர் 'ஷுமுஸ்' என்பதாகும். முதலில் அவருடைய சிறிய தந்தையின் மகனாகிய 'ஸக்ரான் பின் அம்ரு' இவ்வம்மையாரை மணமுடித்திருந்தார்கள். அவருக்கு அப்துர் ரஹ்மான் எனும் ஒரு மகனும் பிறந்தார்கள். இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலேயே இவர்கள் இஸ்லாமை ஏற்றிருந்தார்கள். 'ஹபஷா'வுக்குத் தன்

கணவனுடன் ஹிஜ்ரத் சென்று அங்கு பல்லாண்டுகளைக் கழித்தார்கள். பின்னர் மக்கா வந்து சில நாட்களில் ஹஸ்ரத் ஸவ்தா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களின் கணவர் காலமானார்.

இது சமயம் 'கூலா பின்த் ஹக்கீம்' என்பவர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களிடம் வந்து "உங்களின் சின்னஞ்சிறு குழந்தைகளையெல்லாம் சரியாகப் பராமரிக்கவும் உங்களுக்கு உற்ற துணையாயிருக்கவும், ஒருவர் இருக்க வேண்டியது அவசியமல்லவா?" எனக்கேட்க, கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் 'ஆம்' என்றார்கள். அதன்பின் கூலா, ஹஸ்ரத் ஸவ்தா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களை கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் மணமுடிக்க ஒழுங்கு செய்தார்கள். 400 திர்ஹம் மஹர் நியமிக்கப்பட்டு நுபுவ்வத்தின் பின் 10 ஆம் ஆண்டு ரமழான் மாதம் மணம் முடித்துக் கொடுக்கப்பட்டது.

இவர்கள் சாதாரண எளிய குழந்தை போன்ற குணம் படைத்தவர்கள். அழகு மிக்கவராகவும், பிராட்டியார்களில் எல்லாம் மிக்க உயரமாகவும் அதற்கேற்ற பருமனாகவுமிருந்தார்கள். தர்ம சிந்தனையிலும் தாராள குணத்திலும் மேம்பட்டவர்கள். தாயிப் நகரைச் சேர்ந்த தேசங்களுக்குப் பல சாமான்களைச் செய்து அனுப்பி அவற்றால் கிடைக்கும் வருமானங்களைத் தாராளமாய் நல்ல காரியங்களில் செலவு செய்து கொண்டிருந்தார்கள். இவர்கள் வயோதிகப் பருவமடைந்ததும், ஒரு சமயம் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் தமக்குத்

தலாக் என்னும் விவாக விலக்கு அளித்து விட்டால் என்ன செய்வது? பின்னர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் சாவகாசம் நமக்குக் கிட்டாதே என்று அகாரணமாய் நினைத்துக் கொண்டு, தங்களுக்கெனக் குறிப்பிடப்பட்டிருந்த நேரத்தை ஹஸ்ரத் ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கு அர்ப்பணம் செய்து விட்டார்கள். அவர்கள் மறைந்த திகதியையிட்டு அபிப்பிராய பேதங்களிருக்கின்றன. இதன்படி ஹிஜ்ரத் 21 இல் இறையடி சேர்ந்தார்கள்.




மேலும் பல இஸ்லாமிய பெரியார்களின் சரிதைகளை, எங்கள் இணையத்தளத்தில் வாசியுங்கள்:

www.mailofislam.com